மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 485 திரு. இரா. நடேசன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

485—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் சாலை அமைத்தல்.

* 3511—திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் வட்டம் பள்ளிப் பொத்தையிலிருந்து தோவாளை கூட்டம் முக்கூடல் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்ய பணிகளின் மொத்த மதிப்பீடு ஒரு கோடியே இருபத்தாறு இலட்சத்து ஐம்பது ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு நன்றி. இந்த ஆண்டிலேயே அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழே எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலத்திலே 35 கோடி ரூபாயை மத்திய அரசின் அனுமதியோடு இந்தத் திட்டங்களுக்காக நாங்கள் கொடுக்க வேண்டுமென்று இன்றைக்கு இந்தத் திட்டத்தையும் அதிலே சேர்த்திருக்கிறோம் ஆகவே, அந்த நிதி ஒதுக்கீடு வருகின்ற நேரத்திலே இந்தச் சாலை அமைப்பது பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 486 மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.